**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.74/2016**

2025=ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ம் நாள் புதன்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

**D.W.1 விஜயகுமார் வயது 56 , த/பெ அண்ணாமலை**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

17. கோயிலுக்கு கட்டிய வரி ரசீதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.23 முதல் 37 வரை மின் கட்டண ரசீதுகளில் அறக்கட்டளை என்றுதான் வருகிறது என்றாலும், குறிப்பிட்டு விஜயகுமார், தர்மன், ஜெயராமன் பெயர்கள் வரவில்லை என்றால் நாங்கள்தான் கட்டி வருகிறோம், ஆனால் பெயர் அறக்கட்டளை என்று வருகிறது. வாதி தரப்பில் அவர்கள் தரப்பில் மின் கட்டண ரசீதுகள் கட்டி மேற்படி மின் கட்டண ரசீதுகளை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது வா.சா.ஆ.9 முதல் 22 வரை குறியீடு செய்யப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மின்சார கட்டணத்தை ஒருவர்தான் கட்ட இயலும். ஒருவர் கட்டி விட்டால் மற்றவர் கட்ட இயலாது.

18. பி.சா.வா.ஆ.40 நான் தாக்கல் செய்த புகைப்படங்கள் மற்றும் சிடி என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்களில் பேனர்கள் வைத்து திருவிழா நடத்தியது எங்கள் பெயர் என்று தனியாக குறிப்பிட்டு இருந்ததா என்றால் பொதுவாக செய்வதால் பெயர் குறிப்பிடவில்லை. பி.வா.சா.ஆ.4 முதல் 12 வரையான ஆவணங்கள் மகா கும்பாபிஷேகம் என குறிப்பிட்டு, எங்கள் அறக்கட்டளைதான் திருவிழாவை நடத்தியது என்பதற்கு எங்கள் பெயர் குறிப்பிட்டு அழைப்பிதழ் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பொதுவாக செய்வதால் பெயர் குறிப்பிடவில்லை.

19. வாதி தரப்பிலும் வா.சா.ஆ.2 மேற்படி கிருஷ்ண ஜெயந்தி நடத்தி மேற்படி அழைப்பிதழ் செய்யப்பட்டுள்ளதா என்றால் சரிதான். நாங்கள் செய்த பின்தான் அவர் அவ்வாறு செய்தார். சாட்சி தன்னிச்சையாக அவர் வேண்டுதலுக்காக எங்களிடம் கேட்டார், அதற்கு இணங்க நாங்கள் அவ்வாறு செய்ய அனுமதித்தோம். வாதி கோயிலை நிர்வாகம் செய்த சமயத்தில் நாங்கள் வாதியிடம் சென்று நிர்வாகம் செய்ய பிரச்சினை செய்தோம் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஆதரவாக ஆரணி கிராமிய காவல் நிலையத்தார் இருந்தார்கள் என்பதால் வாதி மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் கிரிமினல் ஓ.பி 17234/16 என்ற வழக்கை எங்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அந்த சமயத்தில் நான் செயலாளராக இல்லை, ஏழுமலை என்பவர்தான் இருந்தார்.

20. மேற்படி மனுவின் அடிப்படையில் மாண்புமிகு.சென்னை உயர்நீதிமன்றம் 09.08.2016 அன்று நாங்கள் யாரும் வாதியை நிர்வாகம் செய்ய தடை செய்யக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. எங்களுக்கு யாரும் தடைப் போடவில்லை. அதன் பின்னிட்டு நாங்கள் எங்கள் ஊரில் அறங்காவலர் என்று குறிப்பிட்டு வசூல் செய்ய ஆரம்பித்தோம் என்றால் இல்லை.

21. மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக மாண்புமிகு.ஆரணி சார்பு நீதிமன்றத்தில் சிஎம்ஏ எண். 1/2017 என்ற வழக்கு எங்களுக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது என்றால் நான் அந்த சமயத்தில் பொறுப்பாளராக இல்லை. ஏழுமலை என்பவர்தான் பொறுப்பாளராக இருந்தார். 2023ம் ஆண்டுதான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது அது வா.சா.ஆ.25 மற்றும் 26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, மேற்படி தீர்ப்பில் நாங்கள் வசூல் செய்யக் கூடாது உத்தரவாகியிருந்த சமயத்தில் நான் பொறுப்பாளராகதான் இருந்தீர்கள் என்றால் இல்லை.

22. நாங்கள் நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்காமல் செயல்பட்டு வருகிறோம் என்றால் இல்லை. சாட்சி தன்னிச்சையாக சமாதான கூட்டத்தில் நாங்கள் தான் செய்ய வேண்டும் என்று வட்டாட்சியர் உத்தரவு கொடுத்தார், அதன் அடிப்படையில்தான் நாங்கள் செய்து வருகிறோம். அது சம்மந்தமான ஆவணங்களை நாங்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோம். எங்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன்.

23. வாதி தரப்பில் அறக்கட்டளை ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சமாதான கூட்டம் எந்த தேதி, எந்த மாதம், எந்த ஆண்டு நடந்தது என்ற விவரம் சொல்ல முடியுமா என்றால் தேதி, மாதம், ஆண்டு தெரியாது, ஆனால் விவரம் தெரியும். மேற்படி சமாதான கூட்டத்தில் என்ன முடிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றாலும் 2 தரப்பிலும் கையொப்பம் இட்டார்கள் என்றால் எங்கள் தரப்பில் கையொப்பம் செய்தோம். எதிர் தரப்பில் வெளி நடப்பு செய்து விட்டார்கள். என்ன முடிவு செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். சாட்சி தன்னிச்சையாக திருவிழாவை நடத்த சொல்லி உத்தரவு கொடுத்தார்கள்.

24. மேற்படி உத்தரவு நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லியவாறு மேற்படி நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞரிடம் நான் கொடுத்து விட்டேன், அவர் தாக்கல் செய்தாரா இல்லையா என்பது எனக்கு தெரியாது. மேற்படி நாங்கள்தான் திருவிழா மற்றும் நிர்வாகம்

செய்ய வேண்டும் என்று எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் உத்தரவு கொடுத்தார்கள், தேதியை நாங்கள் பார்த்து சொல்கிறோம். இன்னும் தாசில்தார் அலுவலகத்தில் மேற்படி உத்தரவு நகல் உள்ளது.

25. நான் வாதியை நிர்வாகம் செய்யாமல் தடை செய்து, நீதிமன்ற உத்தரவை மீறி நாங்கள் நிர்வாகம் செய்து வருகிறோம் என்றால் இல்லை. இது சம்மந்தமாக ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் வாதிக்கு எதிராக நாங்கள் பொய்யாக புகார் அளித்தோம் என்றால் புகார் அளிக்கவில்லை. சாட்சி தன்னிச்சையாக நாங்கள் யாரும் அந்த அளவிற்கு பெரிய ஆட்கள் இல்லை, சாதாரண விவசாய குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று கூறினார். மேற்படி வாதி கொடுத்த புகாரை எங்கள் தரப்பில் Mistake of Fact என்று சொல்லி முதல் தகவல் அறிக்கையை குற்ற எண். 147/2016 என்பதை முடித்து விட்டோம் என்றால் காவல் துறை எங்கள் இரு தரப்பினரையும் விசாரணை செய்ததில் எந்த அடிப்படை முகாந்திரமும் இல்லை என்று அவர்களே முடித்து விட்டார்கள்.

26. வாதி கோயில் நிர்வாகத்தை நடத்துவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் இல்லை. அவர் தனி மரியாதை கேட்பதைதான் நாங்கள் மறுக்கிறோம். பொதுவாக செய்தால் நாங்கள் மறுக்கவில்லை. வாதி நிர்வாக அறங்காவலர் என்ற பொறுப்பில் அவர் நிர்வாகம் செய்து வந்தார். அதை தடை செய்யும் விதமாக நாங்கள் நடந்தோம் அதற்காகதான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி முதலில் அறங்காவலர் இல்லை. அவரேதான் அவ்வாறு சொல்லி கொண்டு நிர்வாகம் செய்து வருகிறார். எங்கள் குழுவில் இருந்து எந்த முடிவும் அவர்தான் அறங்காவலர் என்று உத்தரவு பிறப்பிக்கவில்லை.

27. எங்கள் தரப்பில் நாங்கள் தாக்கல் செய்த பொதுக்குழு ஆவணம் அனைத்தும் நாங்கள் பொய்யாக தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. சாட்சி தன்னிச்சையாக தீர்மானம் செய்துதான் ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்று கூறினார். நாங்களும் பொது குழுவில்தான் உள்ளோம், நாங்கள் யாரும் அறங்காவலராக இல்லை என்றால் சரிதான். நாங்கள் யாரும் அறங்காவலராக இல்லை, நிர்வாக தலைவராக பொறுப்பேற்று உறுப்பினர்கள் துணையுடன் செய்து வருகிறோம்.

28. நாங்கள் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 அறக்கட்டளை பத்திரத்தை புதுப்பிக்கவில்லை என்றால் சரிதான். 2015ம் ஆண்டு பி.வா.சா.ஆ.18 ஆவணமானது தீர்மானம் செய்து கையொப்பம்

வாங்கி இதுநாள் வரை எந்த தீர்மானமும் செய்யப்படாமல் கடந்த 10 வருடமாக அப்படியே உள்ளது என்றால் தீர்மானம் எழுதி வைத்துள்ளோம், ஆனால் அதை ஆவணமாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

29. நாங்கள் அறங்காவலராக இல்லை. வாதிதான் அறங்காவலர் எனவே வாதி கோரிய பரிகாரம் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது, மறு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
District Munsif Court,
Arni.